தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில்
YAMAHA SHOWROOM
தமிழர் தைத்திருநாளை முன்னிட்டு
குறிப்பிட்ட மாடல்களுக்கு மட்டும்
₹ 10,000
SPECIAL OFFER

ஸ்ரீ கோமதி ஆட்டோ ஏஜென்சிஸ்
197-B,மெயின் ரோடு, சங்கரன்கோவில்
99442 14004

# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

PRGI NO: TNTAM/25/A1018

SN ஆட்டோ கன்சல்டிங்
டூவீலர் விற்க வாங்க...
பைனான்ஸ் வசதி உண்டு
317, ராஜபாளையம் ரோடு, SBI வடபுறம், சங்கரன்கோவில்
G.சுதாகர் - 99656 02104

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 221 03.2.2026 TUESDAY THAI : 20 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 221 03.2.2026 திங்கள்கிழமை தை : 20 விலை : ரூ.5/-

## "பட்ஜெட்டில் ஊழலுக்கு இடமில்லை என்பதால்

# "திமுக குறை சொல்கிறது!"

## இந்தியாவுக்குள் 4 சீன டாங்கிகள் நுழைந்ததாக ராகுல் குற்றச்சாட்டு

### மக்களவையில் கடும் அமளி



புதுடெல்லி: பிப்.3-

இந்திய சீன மோதலின்போது, சீனாவைச் சேர்ந்த நான்கு டாங்கிகள் இந்திய எல்லைக்குள் நுழைந்ததாக முன்னாள் ராணுவத் தளபதி நரவணேயின் வெளியிடப்படாத சுயசரிதையில் எழுதப்பட்டிருப்பதாக ராகுல் காந்தி கூறியதை அடுத்து, மக்களவையில் கடும் அமளி ஏற்பட்டது. இதையடுத்து, மக்களவையை சபாநாயகர் ஓம் பிர்லா ஒத்திவைத்தார்.

குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் மக்களவையில் இன்று நடைபெற்றது. அப்போது பேசிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, "பாஜகவைச் சேர்ந்த ஓர் இளம் எம்.பி. (தேஜஸ்வி சூர்யா) காங்கிரஸ் கட்சிக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தார். எங்கள் தேசபக்தி குறித்தும் கலாச்சாரம் குறித்த எங்கள் புரிதல் குறித்தும் அவர் கேள்வி எழுப்பினார். எங்களைப் பற்றி அவர் கேள்வி எழுப்பியதால் நான் அது தொடர்பான ஒரு விஷயத்தில் இருந்து எனது உரையை தொடங்க விரும்புகிறேன்.

இது முன்னாள் ராணுவத் தளபதி நரவனேவின் நினைவுக் குறிப்பில் இருந்து எடுக்கப்பட்டது. இதை நீங்கள் நன்றாக கேட்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அப்போதுதான், யார் தேச பக்தி உள்ளவர், யார் இல்லாதவர் என்பதை நீங்கள் சரியாக புரிந்து கொள்வீர்கள். இது, நான்கு சீன டாங்கிகள் இந்திய எல்லைக்குள் நுழைந்தபோது நடந்த சம்பவம் பற்றியது. அவை டோக்லாமில் உள்ள ஒரு முகட்டைக் கைப்பற்றிக் கொண்டிருந்தன" என தெரிவித்தார்.

அப்போது ஆளும் கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் எழுந்து, "மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் மேற்கோள் காட்டும் புத்தகத்தை அவையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஏனெனில், அவர் குறிப்பிடும் புத்தகம் இன்னும் வெளியிடப்படவில்லை" என தெரிவித்தார்.

இதற்கு பதில் அளித்த ராகுல் காந்தி, "எனது ஆதாரம் நம்பகமானது. டிசம்பர் 2019 முதல் ஏப்ரல் 2022 வரை ராணுவத் தளபதியாக இருந்த முன்னாள் ராணுவத் தளபதி ஜெனரல் எம்.எம்.நரவணேவின் வெளியிடப்படாத நினைவுக் குறிப்புகளை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்ட ஒரு பத்திரிகை கட்டுரையில் இடம்பெற்றுள்ளன" என தெரிவித்தார்.

'வெளியிடப்படாத விஷயங்களை அவையில் வாசிக்கக் கூடாது' என்று ஆளும் தரப்பு எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். அப்போது சபாநாயகர் ஓம் பிர்லா, 'வெளியிடப்படாத விஷயங்களை அவையில் வாசிக்க முடியாது' என தெரிவித்து, அதை வாசிக்கக் கூடாது என உத்தரவிட்டார். சட்டம் மற்றும் விதிகளின்படி அவை நடைபெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தனது கருத்தை முழுமையாக தெரிவிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்று சமாஜ்வாதி கட்சி தலைவர் அகிலேஷ் யாதவ் கூறினார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்துப் பேசிய மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, "பத்திரிகைகள் அல்லது செய்தித்தாள்களில் இருந்து வரும் கட்டுரைகளை அவையில் மேற்கோள் காட்ட முடியாது என்று சபாநாயகர் உத்தரவிட்டுள்ளார். அவையில் விவாதம் என்பது சட்டங்களின்படி நடத்தப்பட வேண்டும். சபாநாயகரின் தீர்ப்பை மதிக்காத ஒரு உறுப்பினர் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்தும் நாம் விவாதிக்க வேண்டும்" என கூறினார்.

இரு தரப்பு எம்பிக்களும் அமளியில் ஈடுபட்ட நிலையில், அவையை மாலை 4 மணி வரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்தார்.

## விஜய்க்கு டான்ஸ் ஆடத் தெரியும், தலைவராக ஒன்றுமே தெரியாது; நயினார் நாகேந்திரன்

தூத்துக்குடி: பிப்.3-

தூத்துக்குடியில் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டி;

தமிழக முதல்வர் இந்த 5 ஆண்டுகளில் மத்திய அரசு ஏதாவது தந்திருக்கிறது என்று இது வரைக்கும் சொல்லி இருக்கிறாரா? சொல்லவே இல்லை. இந்த விமான நிலையம் (தூத்துக்குடி) 350 கோடி ரூபாய். திருச்சி விமான நிலையம் விரிவாக்கம் 650 கோடி ரூபாய். பட்ஜெட்டுக்கு முன்னால் 11 வந்தே பாரத் ரயில்கள். 11 மருத்துவக்கல்லூரிகளை இபிஎஸ் கொண்டு வந்தார்.

ஏதாவது வேண்டும் என்று இவர்கள்(முதல்வர் ஸ்டாலினை குறிப்பிடுகிறார்) கோரிக்கை வைத்து இருக்கிறார்களா? இன்றைக்கு தமிழகத்தில் ரேஷன் கடைகளில் கொடுக்கப்படும் அனைத்து பொருட்களும் மத்திய அரசு இலவசமாக கொடுக்கிறது. அதை ஸ்டிக்கர் ஒட்டி இன்றைக்கு நாங்கள் கொடுக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

இன்றைக்கு எல்லாருக்கும் மத்திய அரசு வீடு கொடுக்கிறது. அதில் மத்திய அரசின் பங்கு 60 சதவீதம் உள்ளது. மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அருமையான பட்ஜெட்டை தந்திருக்கிறார். ஆதிச்சநல்லூரில் ஒரு கலாசார மையம் ஏற்படுத்தி தரப்படும் என்று சொல்லியுள்ளார். மருத்துவத்துறைக்கு 10,000 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளார். அதில் இருந்து எந்த எந்த மாநிலத்திற்கு என்று பிரித்து ஒதுக்குவார்கள். ஒட்டுமொத்தமாக பட்ஜெட்டை படித்து பார்த்து விட்டு முதல்வர் சொல்ல வேண்டும்.

என்டிஏ கூட்டணி என்றால் பாஜ, அதிமுக, தமாகா என பல கட்சிகள் உடன் இருக்கிறது. இது கூட தெரியாமல் இப்படி பேசிக்கொண்டே இருந்தால் எப்படி?

தம்பி விஜய்க்கு விஷயம் ஒண்ணுமே தெரியாது என்று நினைக்கிறேன். இன்றைக்கு டான்ஸ் ஆடி இருக்கிறார். ஒரு கட்சியின் தலைவராக இருப்பவர் 3ம் ஆண்டு தொடக்க விழாவில் டான்ஸ் ஆடி இருக்கிறார். ஒரு நாட்டிலே, ஒரு கட்சியின் தலைவராக இருந்து கொண்டு, தமிழகம், தமிழகத்தின் கலாசாரம் என்ன என்று தெரியாமல் டான்ஸ் ஆடிட்டு இருந்தால், டான்ஸ் ஆடிட்டே இருக்க வேண்டியது தான்.

இவ்வாறு நயினார் நாகேந்திரன் பேட்டியில் கூறினார்.

## தமிழக பாஜக பதிலடி!..

சென்னை: பிப்.3-

"நிர்மலா சீதாராமன் அறிவித்த மோடி வளர்ச்சி மாடல் 2026-27 பட்ஜெட்டில் தமிழகத்தின் வளர்ச்சிக்கான திட்டங்கள் நிறைய இருக்கிறது. ஆனால் அதில் திமுகவினர் ஊழல் செய்வதற்கான திட்டங்கள் இல்லை, என்பதனால் அவற்றை முதல்வர் மறைக்கப் பார்க்கக் கூடாது" என தமிழக பாஜக விமர்சித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: தமிழக முதல்வர் ஸ்டாலின் மத்திய பட்ஜெட் புத்தகத்தை புரட்டிப் பார்க்கக் கூடாது. நல்லெண்ணத்துடன் படித்துப் பார்த்து, தமிழகத்தின் நீண்ட கால கோரிக்கைகள் நிறைவேற்றும் வகையில் தமிழகத்திற்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதை மனம் திறந்து அரசியல் நாகரீகத்தோடு வரவேற்க வேண்டும்.

இந்தியாவின் இளைய தலைமுறையின் எதிர்காலத்தை மாற்றக்கூடிய வகையில் உலகின் முதல் நிலை நாடாக உருவாகும் வகையில் மத்திய பட்ஜெட் 2026 27 உருவாக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் திமுக கூட்டணி ஆட்சியில் பலவீனமான நாடாக 5 ஆம் நிலையிலிருந்த இந்தியா, மோடி அரசு பதவி ஏற்ற 11 ஆண்டுகளில் உலகின் தலைசிறந்த ஐந்து நாடுகளில் ஒன்றாக மாறி உள்ளது. நம் தமிழ் சகோதரி நிர்மலா சீதாராமன் இந்த சாதனையை அடைவதற்கு காரணமாக இருந்துள்ளார்.

தமிழன்னையின் தங்க மகளாக, இந்திய அரசியல்




வரலாற்றில் முதல் முதலாக ஒன்பதாவது முறையாக, சாதனை சிகரமாக, வரலாற்றுச் சிறப்புமிக்க பட்ஜெட்டை தாக்கல் செய்திருக்கும் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு பெண்கள் பெருமை, நலன் காக்கும் முதல்வர் என்று அடையாளப்படுத்திக் கொள்ளும் முதல்வர் ஸ்டாலின் ஏன் வாழ்த்து சொல்லவில்லை?

பாஜக தமிழ் பேசினாலும், பாஜகவில் தமிழர்கள் சாதனை புரிந்தாலும், பிரதமர் மோடி இந்திய மக்கள் அனைவரும் தமிழை கற்றுக் கொள்ள வேண்டும் என்று காசி தமிழ் சங்கத்தில் அறிவித்து இந்தியா முழுவதும் அனைத்து மாநில மக்களும் தமிழைப் பெருமையுடன் மகிழ்ச்சியுடன் கற்றுக் கொண்டாலும் திமுக வரவேற்காமல் அச்சப்படுவது ஏன்?

திருவள்ளுவர் வழியில் திருக்குறள் நெறியில் ஆட்சி செய்யும் பிரதமர், தகுதியுடன் திருவள்ளுவரை, திருக்குறளின் பெருமையை உலகெங்கும் சொல்லி மகிழ்ந்தால் நாடகம் என்று திமுக முதல்வர் ஸ்டாலினும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும் மனசாட்சி இல்லாமல் அவதூறு பிரச்சாரம் தமிழகத்தில் செய்கின்றனர். ஆனால் இந்த பட்ஜெட்டில் ஏன் திருக்குறள் இடம் பெறவில்லை என்று தேர்தல் அரசியலுக்காக கூக்குரல் இடுகின்றனர்.

தலைசிறந்த முதல் நிலை வல்லரசு நாடாக இந்தியா உருவாக்குவதற்கு அடித்தளத்தை அமைக்கும் வகையில் மத்திய பட்ஜெட் 202627 உருவாக்கப்பட்டுள்ளது. நீண்ட கால கோரிக்கைகள் நிறைவேற்றும் வகையில் தமிழகத்திற்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது திமுக மறைக்கப் பார்க்கக் கூடாது.

தமிழ் தமிழகம் தமிழருக்கு பெருமை சேர்க்கும் வகையில் தமிழகத்திற்கான தேர்தல் அரசியலுக்காக ரயில்வேத்துறை, சுற்றுலாத்துறை, கனிமவளத்துறை, தமிழகத்தின் மிக முக்கிய பொருளாதாரம் மண்டலங்களாக வளர்ச்சி அடையக் கூடிய வகையில் ராமேஸ்வரம்,மதுரை, காஞ்சிபுரம் மற்றும் கும்பகோணம் போன்ற நகரங்களை மேம்படுத்துவதற்கான திட்டங்கள், தமிழகத்தின் பண்டைய நாகரீகம் கலாச்சாரம் தொன்மைகளை விளக்கும் ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சி சிறப்புகளை உலகம் முழுதும் கொண்டு போய் சேர்க்கும் திட்டம் என்ன மேலும் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலும் விரைவில் மத்திய அரசு, தமிழகத்திற்கான பல முக்கிய வளர்ச்சி திட்டங்களை அறிவிக்க உள்ளது. பல லட்சம் கோடி திட்டங்களை தமிழகத்திற்கு பிரதமர் அறிவித்தாலும், மோடி என்ன செய்தார்? என்று திரும்பத் திரும்ப அவதூறு பரப்பி , பொய்யை உண்மையாக முயற்சிக்கும் திமுக அரசின் சூழ்ச்சிகள் தமிழக மக்களிடம் இனி எடுப்படாது.

இந்தியாவின் நீண்டகால ஆழமான வளர்ச்சியை முன்னிறுத்தி, உண்மையான பொருளாதாரம் மாற்றத்திற்கான வலிமை தரும் வகையில், நிதி ஒழுக்கத்தை காக்கும் வகையில், நிதி முதலீடுகளை குறைக்காமல், நிதி பற்றாக்குறையை குறித்து, கவர்ச்சிக்கான அறிவிப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தாக்கல் செய்யப்பட்டுள்ள 'மோடி மாடல் பட்ஜெட்' அனைவரிடமும் மகத்தான வரவேற்பையும் பெற்றுள்ளது.

## மக்களை நோயின்றி காக்கும் காவல் தெய்வம் தமிழக முதல்வர்

### என்.பஞ்சம்பட்டியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு




சின்னாளபட்டி, பிப்.3

தமிழக மக்களை நோயின்றி காக்கும் காவல் தெய்வமாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காப்;பாற்றி வருகிறார் என்று என்.பஞ்சம்பட்டியில் நடைபெற்ற நலன்காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம் என்.எஞ்சம்பட்டியில் உள்ள புனித அகஸ்தினார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நலன்காக்கும் ஸ்டாலின் மருத்துவமுகாம் நடைபெற்றது. முகாமிற்கு சுகாதாரதுறை துணை இயக்குநர் செல்வகுமார் தலைமை தாங்கினார். நலப்பணிகள் இணை இயக்குநர் மருத்துவர் பத்மா, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மருதாம்பாள் ஆல்பர்ட், ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார மருத்துவ அலுவலர் ஆனந்தீஸ்வரி வரவேற்று பேசினார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் முகாமை துவக்கி வைத்து கர்ப்பிணி பெண்களுக்கு மருத்துவ பெட்டகங்களை வழங்கிய பின்பு பொலீதுமக்கள் மத்தியில் பேசிய போது முத்தமிழ் அறிஞர் முதல்வராக இருந்தபோது கொண்டவந்த வரும்முன் காப்போம் திட்டம் கிராமப்புற ஏழை மக்களை காப்பாற்றியது. அவர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த மக்களைத் தேடி மருத்துவம், நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் மூலம் தமிழகத்தில் உள்ள அனைவரையும் நோயின்றி காக்கும் நிலைமை உருவாகி உள்ளது. ஒ

சின்னாளபட்டி மருத்துவ மனை விரையில் அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும். அதன் பின்னர் மருத்துவ முகாம் நடைபெறும் இடங்களை பார்வையிட்டு பொதுமக்களுக்கு அளிக்கப்படும் மருத்துவ சிகிச்சைகளை கேட்டறிந்தார்.

முகாமில் மருத்துவர்கள் ரத்தீஸ் ஆனந்த், பிரபு, சர்மிளா, சுபாஷினி, பிரசாந்த், மங்கலேஸ்வரி, ரதிபிரியா, மருத்துவர் சிவா, சரவணபிரியா, திவ்யா, டீன் மொர்சிலி சுகாதார ஆய்வாளர்கள் சந்திரமோகன், தர்மராஜ், பிரபாகர், அருள், ராஜேந்திரன் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு மருத்துவ சிகிக்சை மற்றும் மருத்துவ ஆலோசனைகளை வழங்கினார்கள். 17 பிரிவுகளில் பொதுமக்களுக்கு சிகிச்சை மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகாந்தன், என்.பஞ்சம்பட்டி மணி, அகரம் பேரூராட்சி மன்றத் தலைவர் மணி, புனித அகஸ்தினார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி தாளாளர் அருட்சகோதரி சூசை மரியாள், தலைமை ஆசிரியை அருட்சகோதரி ஜோஸ்பின் ஜெயமேரி, பட்டாதாரி ஆசிரியை பெட்ரீசியா ஹேமலதா, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக துணை செயலாளர்கள் எம்.சி.பாண்டியன், ராஜேந்திரன், வசந்தா கென்னடி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ராஜகணேஷ், துணை அமைப்பாளர் என்.பஞ்சம்பட்டி மெல்வின், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், துணை அமைப்பாளர் கார்த்திக், அரசு ஒப்பந்ததாரர் ஜீசஸ் அகஸ்டீன், திண்டுக்கல மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ்;, முன்னாள் ஒன்றிய அவைத்தலைவர் கே.பி.வீரையா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் பாப்பாத்தி நாகராஜன், உலகநாதன், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் வசந்தகுமார், காணிக்கை சாமி, கிளைச் செயலாளர்கள் பஞ்சம்பட்டி தாஸ் வேளாங்கண்ணி, மில்மேடு அருண் பாண்டியன், என்.பஞ்சம்பட்டி முன்னாள் கிளைச் செயலாளர் ஜான் கென்னடி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



# தென்காசி புளியங்குடியில் தவெக மூன்றாம் ஆண்டு துவக்க விழா பொதுக் கூட்டம்

புளியங்குடி,பிப்.03- புளியங்குடியில் தமிழக வெற்றி கழகத்தின் மூன்றாம் ஆண்டு துவக்க விழா பொதுகூட்டம் நடைபெற்றது. புளியங்குடி மின் வாரிய அலுவலகம் எதிரில் நடைபெற்ற கூட்டத்திற்கு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் மாரியப்பன் தலைமை வகித்தார். மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அமுதா ராணி, இளைஞரணி இணை அமைப்பாளர் தினேஷ் பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு பேச்சாளராக மாநில துணை பொது செயலாளர் ராஜ் மோகன், செய்தி தொடர்பு அணி ஒருங்கிணைப்பாளர் ரமேஷ், கொள்கை பரப்பு இணை செயலாளர் லயோலா மணி, மாநில நிர்வாகிகள் சம்பத்குமார், கேதரின் பாண்டியன், ஜெகதீசபாண்டியன் ஆகியோர் சிறப்புரை வழங்கினர்.

இதில் திருநெல்வேலி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் ராஜகோபால், வடக்கு மாவட்ட செயலாளர் மரியஜன், கிழக்கு மாவட்ட செயலாளர் ஜாகிர் உசேன், தென்காசி மேற்கு மாவட்ட செயலாளர் நியாஸ், மத்திய மாவட்ட செயலாளர் ராஜபிரகாஷ், தென்காசி தெற்கு விபின் சக்கரவர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் சூர்யா (எ) அகல்யா, உடையார், மகேஷ், மீனாட்சி மண்டல நிர்வாகிகள், ரவிச்சந்திரன், மனிஷா சாமி ஏலியாஸ், வாசுதேவநல்லூர், சங்கரன்கோவில் பகுதிகளை சேர்ந்த மாநில , மாவட்ட , மண்டல , ஒன்றிய, நகர , நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ மதுவிலக்கு மற்றும் ஆயத்த தீர்வை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாநகராட்சி வீரப்பன்சத்திரம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில், மாணவியர்களுக்கு விலையில்லா மிதி வண்டிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ் உட்பட பலர் உள்ளனர்



# தென்காசி நகர பாரதீய ஜனதா கட்சியின் மத்திய அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்

தென்காசி, பிப்.03- தென்காசி எல்.ஆர். எஸ். பாளையம் பகுதியில் நடைபெற்றது. பா.ஜ.க. நகர தலைவர் 'சங்கரசுப்பிரமணியன், தலைமை தாங்கினார். நகர பொருளாளர் லட்சுமண பெருமாள் பொதுச்செயலாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொருளாளர் விஸ்வநாதன் வரவேற்று பேசினார். இதில் பா.ஜ.க. மாநில பொதுச்செயலாளர் ராம ஸ்ரீனிவாசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார்.

தொடர்ந்து பா.ஜ.க. மாவட்ட தலைவர் ஆனந்தன் அய்யாசாமி, மாவட்ட பொதுச் செயலாளர்கள் பாலகு ருநாதன், அருள் செல்வன், பால சீனிவாசன், மாவட்ட பெரியகான்ளர் கோதை மாரியப்பன் உள்ளிட்டோரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார். நிகழ்ச்சியில் மாநில நிர்வாகிகள் தீனதயாளன், அன்புராஜ், ராமராஜா, ராஜேஷ் ராஜா, முருகன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ராஜாரா முத்துக்குமார், மந்திரமூர்த்தி, த்துக்குமார், மந்தி செந்தூர்பாண்டியன் உட்பட பா.ஜ.க. நிர்வாகிகள், தொண்டர்கள் என 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## கௌரவ விரிவுரையாளர்கள் கைது...

## குடிபோதையில் சாவவர்களுக்கு நிவாரணம்....

# நாங்கள் பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டோம் முனைவர் பட்டம் பெற்றவர்கள் குமுறல்!..

சென்னை, பிப்.03- தமிழக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணியாற்றும் கௌரவ விரிவுரையாளர்கள், தங்களின் பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று சென்னை மெரினா கடற்கரையில் திரண்டபோது காவல்துறையினரால் வலுக்கட்டாயமாகக் கைது செய்யப்பட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பெண் கௌரவ



விரிவுரையாளர் ஒருவர் கூறுகையில்:

“முனைவர் பட்டம் (PhD) பெற்றும் கடந்த 15 20 ஆண்டுகளாக மிகக் குறைந்த ஊதியத்தில் வறுமைக் கோட்டிற்கு மிகக் கீழே வாழ்ந்து வருகிறோம். எங்களுக்கு 48 வயதாகியும் இன்னும் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை” என்றார்.

“கடந்த வாரம் எங்களில் ஒருவர் உயிரிழந்தார். அவருக்கு இறுதிச் சடங்கு செய்யக் கூட வழியில்லாமல் நாங்கள் அனைவரும் பணம் வசூலித்துக் கொடுத்தோம். குடிபோதையில் சாவவர்களுக்கு நிவாரணம் வழங்கும் அரசு, உழைக்கும் எங்களுக்கு எதையும் செய்யவில்லை” என வேதனை தெரிவித்தார். “மாதம் ரூ.25,000 மட்டுமே சம்பளம். அதுவும் 11 மாதங்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. 12 வது மாதம் குடும்பத்தை நடத்த வழியின்றி எங்கள் நிலைமை பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது” என்று குமுறினார்.

உயர்கல்வித் துறையின் முதுகெலும்பாக விளங்கும் தங்களை அரசு இனியாவது திரும்பிப் பார்க்க வேண்டும் என்பதே இவர்களின் ஒரே கோரிக்கையாக உள்ளது.



## அன்புமணிக்கு மாம்பழ சின்னம்: தேர்தல் ஆணையம் பதிலளிக்க ஐகோர்ட் 3 வாரம் அவகாசம்

சென்னை, பிப்.03- பாமகவுக்கு மாம்பழ சின்னம் ஒதுக்கீடு செய்து, அன்புமணிக்கு தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்பியதை எதிர்த்து கட்சி நிறுவனர் ராமதாஸ் தாக்கல் செய்த வழக்கில், தேர்தல் ஆணையம் பதிலளிக்க 3 வாரம் அவகாசம் வழங்கி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சியின் உரிமை தொடர்பாக தலைவர் அன்புமணிக்கும், நிறுவனர் ராமதாஸுக்கும் இடையில் மோதல் நடந்து வரும் சூழலில், கட்சிக்கு மாம்பழ சின்னம் ஒதுக்கீடு செய்துள்ளதாக, தேர்தல் ஆணையம், அன்புமணி முகவரிக்கு கடிதம் அனுப்பியிருந்தது.

இந்த கடிதத்தை ரத்து செய்து, தனது முகவரிக்கு கடிதம் அனுப்ப உத்தரவிடக் கோரியும், கட்சி நிறுவனர் ராமதாஸ் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், கடந்த 2025 மே மாதமே பதவிக்காலம் முடிந்த நிலையில், கட்சியின் தலைவராக நீடிப்பதாக போலி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாக அன்புமணி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கட்சி நிறுவனர் என்ற முறையில் தனது அங்கீகாரம் இல்லாமல், சட்டவிரோதமாக கட்சி கூட்டங்களை நடத்தி அன்புமணி உரிமை கோர முடியாது எனவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ள அன்புமணிக்கு தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்பியிருக்க கூடாது என்றும், சின்னம் ஒதுக்கீடு தொடர்பாக தனக்கு தான் கடிதம் அனுப்பியிருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், டெல்லி உயர்நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம், மாம்பழ சின்னத்தை யாருக்கும் ஒதுக்காமல் முடக்கும் என உத்தரவாதம் அளித்திருந்தது. ஆனால் இதுநாள் வரை சின்னத்தை முடக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில், இன்று (பிப்ரவரி 2) விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை விசாரித்த அவர்கள், தேர்தல் ஆணையம் பதிலளிக்க 3 வாரம் அவகாசம் வழங்கி உத்தரவிட்டனர்.



■ மதுரை மாவட்டம், மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பாக போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு போதைப்பொருள் இல்லா தமிழ்நாடு குறித்து ஒட்டு வில்லையை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் பேருந்து மற்றும் ஆட்டோக்களில் ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அர்விந்த், மாநகர காவல் துணை ஆணையர் (போக்குவரத்து) வனிதா ஆகியோர் உடன் உள்ளனர்.

# வெளிநாடுகளுக்கான நிதியுதவிக்கு ரூ.5,685 கோடி ஒதுக்கீடு: வங்கதேசத்துக்கான உதவி 50% குறைப்பு

புதுடெல்லி, பிப்.03- மத்திய பட்ஜெட்டில் வெளிநாடுகளுக்கு வழங்கப்படும் நிதியுதவிக்காக ரூ.5,685.56 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

வெளியுறவு அமைச்சகத்துக்கு 2026-27 நிதியாண்டுக்காக மொத்தம் ரூ.22,118.97 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், ‘மத்திய துறை திட்டங்கள் / திட்டப்பணிகள் ஸ்ரீ நாடுகளுக்கான உதவி’ என்ற தலைப்பின் கீழ் ரூ.5,685.56 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பட்ஜெட் ஆவணங்களின்படி, பூடான் அதிகபட்சமாக ரூ.2,288.56 கோடியைப் பெற்றுள்ளது. இது தனது நெருங்கிய அண்டை நாட்டுடனான வளர்ச்சிப் பங்களிப்பில் இந்தியாவின் தொடர்ச்சியான கவனத்தை உறுதிப்படுத்துகிறது. இதைத் தொடர்ந்து நேபாளத்துக்கு ரூ.800 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

வங்கதேசத்துக்கான நிதியுதவி 50% சரிவைக் கண்டுள்ளது. கடந்த பட்ஜெட் ஆண்டில் ரூ.120 கோடியாக இருந்த நிதி, 202627ல் ரூ.60 கோடியாகக் குறைந்துள்ளது. வங்கதேசத்தில் சிறுபான்மையினர் மீதான தாக்குதல் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இந்த பின்னணியில் நிதி குறைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான ஒதுக்கீடு ரூ.300 கோடியிலிருந்து ரூ.400 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது, மியான்மர் ரூ.300 கோடி, மாலத்தீவு ரூ.550 கோடி, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு ரூ.120 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானுக்கான உதவி ரூ.100 கோடியிலிருந்து ரூ.150 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது, மொரிஷியஸுக்கான உதவி ரூ.550 கோடியாக உள்ளது. வெளிநாடுகளுக்கான பேரிடர் நிவாரண ஒதுக்கீடு ரூ.80 கோடியாகவே நீடிக்கிறது.

ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாக, 202627 பட்ஜெட்டில் ஈரானின் சபஹார் துறைமுகத் திட்டத்துக்கு எந்த நிதியையும் ஒதுக்கவில்லை. மூலோபாய இணைப்புத் திட்டமான இதற்கு கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து ஆண்டுக்கு சுமார் ரூ.100 கோடி ஒதுக்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

# “யார் எதிர்த்து நின்றாலும் கொந்தளிப்பதே திமுகவின் வேலை” தவெக ஆண்டு விழாவில் விஜய் பேச்சு

சென்னை, பிப்.03- “அரசியலில் தங்களை யார் எதிர்த்து நின்றாலும் கொந்தளிப்பதே திமுகவின் வேலை” என்று தவெக 3ம் ஆண்டு தொடக்க விழாவில் அக்கட்சியின் தலைவர் விஜய் பேசினார்.

தவெக ஆரம்பித்து 2 ஆண்டுகள் நிறைவு பெற்று, மூன்றாம் ஆண்டு இன்று தொடங்கும் நிலையில், சென்னை பனையூரில் உள்ள அக்கட்சியின் தலைமை நிலையத்தில் 3ம் ஆண்டு தொடக்க விழா நடந்தது. முன்னதாக கட்சி வளாகத்தில் கட்சிக் கொடியை ஏற்றிவைத்த விஜய், தவெக கொள்கைத் தலைவர்களின் சிலைகளுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து விஜய் தவெகவினர் மத்தியில் பேசியதாவது: காமராஜர், எம்ஜிஆர், அண்ணா இருந்த இடத்தில் இப்போது இவர்களும் இருக்கிறார்களே என்று தமிழக மக்கள் திமுகவைப் பார்த்து கண்ணீர் வடிக்கின்றனர்.

தமிழகத்தில் புதிதாக யார் அரசியலுக்கு வந்தாலும் திமுக அவர்களைப் பார்த்து உங்களுக்கு என்ன அனுபவம் இருக்கிறது? என்று கேள்வி கேட்கும். எம்ஜிஆருக்கு அரசியல் அரிச்சுவடி தெரியுமா? என்று கேள்வி எழுப்பினர். காமராஜருக்கு இலக்கியம் தெரியுமா? என்று கொந்தளித்தனர். இன்று நம்மைப் பார்த்துக் கொந்தளிக்கின்றனர். அரசியலில் யார் அவர்களை எதிர்த்து நின்றாலும் கொந்தளிப்பதே திமுகவின் வேலை.

இத்தனையையும் மீறி தமிழகத்தில் மிகப்பெரிய கட்சியாக தவெக இன்று வளர்ந்திருக்கிறது. அதனால், டெக்னாலஜி வளர்ந்திருக்கும் சூழலில் விமர்சனங்களில் உங்கள் (திமுக) டெக்னிக்கையாவது மாற்றுங்கள்.

அதைவிடுத்து 50 வருடங்களுக்கு முந்தைய தகர டப்பாவை எடுத்து உருட்டுகிறார்கள். ‘பவள விழா பாப்பாவுக்கு’ வேறென்ன தெரியும். பழைய டப்பாவை உருட்டத்தானே தெரியும். ஆனால், அதற்காக



எல்லாம் அவர்கள் செய்யும் தவறுகளை, ஊழல்களை சொல்லிக் காட்டாமல் இருக்க முடியாது. மக்களுடைய ஒரே பிரதிநிதி தவெக மட்டும்தான். திமுகவை தொடர்ந்து நாம் விமர்சனம் செய்வோம்.

இந்த டிஜிட்டல் உலகில் திருவள்ளுவர் இருந்திருந்தால், இந்த தீய சக்தியை பற்றி, ”அநீதி அராஜகம் தில்லுமுல்லு இவையெல்லாம் திமுக முதற்றே உலகு” என்று திருக்குறள் எழுதியிருப்பார்.

தமிழக தேர்தல் களத்தில் மும்முனைப் போட்டி, நான்குமுனை போட்டி என்றெல்லாம் சொல்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்கிறேன். இங்கே மாபெரும் மக்கள் சக்தி கூட்டணி, திமுக கூட்டணி, பாஜக தலைமையில் மற்றும் பலர் கூட்டணி தான் இருக்கிறது. இதில், திமுகவை வீழ்த்த மாபெரும் மக்கள் சக்தியான தவெகவால் மட்டும் தான் முடியும்.

அப்புறம், “ஏய் விஜய், வீட்டைவிட்டு வெளியில் வா...” என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். கொஞ்சம் பொறுமையாக இருங்கள் பாஸ். தேர்தல் தேதியில் தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டில் இருக்கும் ஒவ்வொரு விஜய்யும் வாக்காளர் அடையாள அட்டையுடன் காலையிலேயே பூத் பூத்தாக வந்து நிற்பார்கள். அன்றைக்கு ‘ஏன் விஜய்யை கூப்பிட்டோம்’ என்று நீங்கள் நினைப்பீர்கள்.

நான் என்ன பேசினாலும் ‘இது என்ன சினிமாவா?’ என்று ஆரம்பித்துவிடுகிறார்கள். நானே சினிமாவை விட்டுவிட்டேன். ஆனால் அவர்கள் அதை விடுவதாக இல்லை.

தேர்தலை ஒட்டி சில கருத்துக் கணிப்புகள் வருகின்றன. அவற்றில் சில சரியாகவும் இருக்கின்றன. கூடவே சில ‘கடுப்புக் கணிப்புகள்’ வருகின்றன. அந்த கடுப்புக் கணிப்பாளர்களுக்கு நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஒவ்வொரு வீட்டிலும் தவெக இருக்கிறது. இதை நம்பவில்லை என்றால் நீங்கள் எடுத்த கடுப்புக் கணிப்பை ரப்பர் வைத்து அழித்துவிட்டு மீண்டும் எடுத்துப் பாருங்கள். அப்போதும் தவெக பற்றி அதே ரிசல்ட் தான் வரும். தவெக எல்லோரது வீட்டிலும் இருக்கிறது. இவ்வாறு விஜய் பேசினார்.

ஸ்டாலினை சீண்டிய விஜய்: வழக்கம் போலவே இன்றைய பேச்சிலும் திமுகவை மட்டுமல்லாது முதல்வர் ஸ்டாலினையும் விஜய் விமர்சித்துப் பேசியுள்ளார்.

“சிஎம் சார், ஸ்டாலின் சார், 2 வருடங்களுக்கு முன்பு ஒரு மேடையில், “சில அமைச்சர்கள் செய்யும் அட்ராசிட்டிகளைப் பார்த்து ராத்திரியில் தூக்கம் வரவில்லை” என்று சொன்னீர்கள். அந்த வீடியோகூட இன்னும் இணையத்தில் கிடைக்கிறது. அதையும் தாண்டி ஒருவேளை அவர் என்றாவது அசந்து தூங்கும்போது, ‘சார் எந்த சின்னத்துக்கு ஓட்டுப் போடுவீர்கள்?’ என்று யாராவது அவரை எழுப்பிக் கேட்டால், ‘விசில் சின்னத்துக்கு’ என்பார்.” என்று விஜய் முதல்வர் ஸ்டாலினை கடுமையாக விமர்சித்தார்.

‘விசில் சின்னம் போகாத ஊரே இல்லை...’ தொடர்ந்து பேசுகையில், “தவெக நகர்ப்புறங்களில் தான் இருக்கிறது. கிராமங்களில் இல்லை என்று சொல்பவர்கள் டெஸ்ட் பண்ணிப் பாருங்கள். விசில் சின்னம் போகாத ஊரே இல்லை. விசில் இருக்குமிடமெல்லாம் தவெக இருக்கிறது.

தமிழகத்தில் எனது அம்மா, அக்கா, தங்கை, அண்ணன், தம்பிகள் தவெகவுக்கு வாக்களிப்பதை எவராலும் தடுக்க முடியாது, அவர்களை என்ன விலை கொடுத்தாலும் வாங்க முடியாது,

திமுக என்ற தீய சக்தியை வீழ்த்த தவெக என்ற தூய சக்தியால் தான் முடியும். இது வெறும் நம்பிக்கை மட்டுமல்ல. இதுதான் கள நிலவரம். தமிழக மக்களுக்கு தவெக தான் இப்போது இருக்கும் ஒரே ஆப்ஷன். வேறு எந்த டைவர்ஷனும் அவர்களுக்கு இல்லை.

அதனால் டப்பா இன்ஜின், ஓட்டை இன்ஜின் என எது வந்தாலும் தவெக தான் டாப் இன்ஜின். தவெகவினர் இன்னும் கூர்மையாக வேலை செய்ய வேண்டும். ஒற்றுமையாக செயல்பட வேண்டும். தமிழக மக்கள் குடும்பம் குடும்பமாக நம்முடன் இருக்கிறார்கள்.

அவர்களை தவெகவுக்கு ஓட்டுப்போட வைப்பதே உங்கள் வேலை. மற்றதை மக்களோடு சேர்ந்து நான் பார்த்துக் கொள்கிறேன்’

தமிழக அரசியலில் தவெக ஒரு ‘விசில் ப்ளோயர்’. இந்த விசில் ஊதுவதில் தீய சக்தி, ஊழல் சக்தி தெறித்து ஓட வேண்டும். அன்றைக்கு புனித ஜார்ஜ் கோட்டையில் தவெக ஆளும் கட்சியாக எழும். உங்களோடு நான் இருக்கிறேன். நம்மோடு மக்கள் இருக்கிறார்கள். வெற்றி நிச்சயம்.” என்றார்.



■ திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி வட்டம் செங்கப்பள்ளி சொர்ண மஹாலில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன் மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் தலைமையில், "என் ஊர் என் கனவு" திட்டத்தின் கீழ் இலக்கு 2030 உத்திகள் மற்றும் செயல் திட்டம் தயாரிப்பதற்கான மாவட்ட அளவிலான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மனிஷ் நாரணவரே, மேயர் தினேஷ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குனர் சங்கமித்திரை, முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் சிவப்பிரகாஷ் ஆகியோர் உள்ளனர்.



■ ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் க.சாந்தகுமார் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்.



# கடலோரத்தைப் பாதுகாக்கக் களம் இறங்கிய இளம் விழுதுகள் அறக்கட்டளை இளைஞர்கள்

கன்னியாகுமரி, பிப்.03-

கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்பட்டணத்தில் இளம் விழுதுகள் அறக்க ட்டளை சார்பாக தேங்காய்பட்டணம் துறைமுகக் கடலோரப் பகுதியில் மாபெரும் தூய் மைப் பணி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மீன்வளத்துறை மற்றும் மீனவர் நலத்துறை ஆய்வாளர் லிபின் மேரி, ஊரக வளர்ச்சித்துறை உதவிப் பொறியாளர் ரெஜன், கடலோர காவல் குழும ஆய்வாளர் ரா.ததேயுங்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு தூய்மைப் பணியைத் தொடங்கி வைத்தனர்.

நிகழ்வில் பரவை சாரிட்டபிள் டிரஸ்ட் கணக்காளர் ஐசக், பைங்குளம் ஊராட்சி முன்னாள் தலைவர் N. விஜயராணி, தக்கலை அரசுப்பள்ளி மாணவர் V.G. அடிட்டிக் ஷில் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இளம் விழுதுகள் அறக்கட்டளை நிறுவனர் இராஜகோபால் தலைமையில், செயலாளர் ஹான்ஸ்டன் ஜிக்சிங், பொருளாளர் ஷாஜன் மற்றும் ஏராளமான தன்னார்வலர்கள், மாணவர்கள் திரளாகக் கலந்துகொண்டு கடற்கரைப் பகுதியில் தேங்கிக் கிடந்த குப்பைகளை அப்புறப்படுத்தினர்.

கடலோரப் பகுதிகளைத் தூய்மையாகப் பராமரிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்ட இந்த நிகழ்வின் இறுதியில், சிறப்பாகப் பணியாற்றிய தன்னார்வலர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# இந்தியாவிலேயே 75 ஆண்டுகளாக ஒரே கொள்கை, ஒரே சின்னம் மாபெரும் இயக்கம் திமுக - ஐ.பி.செந்தில்குமார் பேச்சு

சின்னாளபட்டி, பிப் .03-

இந்தியாவிலேயே 75 ஆண்டுகளாக ஒரே கொள்கை, ஒரே சின்னத்துடன் செயல்படும் மாபெரும் இயக்கம் திமுக என்று ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் என்.பஞ்சம்பட்டியில் நடைபெற்ற இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில் குமார் பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் கிழக்கு, மேற்கு, தெற்கு ஒன்றிய திமுக இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் மண்டல மாநாடு ஆலோசனை கூட்டம் என்.பஞ்சம்பட்டியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், கிழக்கு மாவட்ட செயலாளருமான ஐ.பி.செந்தில்குமார் தலைமை தாங்கினார். மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் பாறைப்பட்டி இராமன், கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், தெற்கு ஒன்றிய செயலாளர் இராஜேந்திரன், பேரூர் கழக செயலாளர்கள்



அய்யம்பாளையம் தங்கராஜ், சித்தையங்கோட்டை சக்திவேல், சின்னாளபட்டி பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கணேசன் வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட திமுக மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சி.ஆனந்தகுமார், கிழக்கு மாவட்ட திமுக அவைத் தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, துணைச் செயலாளர் மு.பிலால் உசேன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞரணி நிர்வாகிகள் மத்தியில் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் அவர்கள் பேசும்போது இந்த கூட்டத்தில் 80 சதவீதம் படித்த பட்டாதாரி இளைஞர்கள் வந்திருக்கிறீர்கள், உங்கள் முன்னோர்கள் இப்படி பட்டப்படிப்பு படிக்கும் நிலைமை அப்போது இருந்ததா, மேல் தட்டு மக்கள் மட்டும் உயர்கல்வி கற்கும் நிலை மாறி, அடித்தட்டு பாரம மக்களும் உயர்கல்வி கற்கும் நிலையை கொண்டு வந்தவர்கள்தான் நமது தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர். அவர் வழியில் நின்று திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தமிழக முதல்வராக இருக்கும் ஐயா மு.க.ஸ்டாலின் அவர்களால் வளர்க்கப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்களால் பாதுகாக்கப்பட்டு, இன்று நம்மிடம் ஒப்படைத்து இருக்கும் இயக்கம்தான் திமுக இளைஞரணி என்ற மாபெரும் இயக்கம் என்றார். இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகளில் 75 ஆண்டுகளாக ஒரே கொள்கையுடன், ஒரே சின்னத்துடன் செயல்படும் மாபெரும் இயக்கம்தான் நமது திமுக என்றார்.

தன்னோடு வாழ்ந்து வரும் சமூகத்திற்காக சனாதன தர்மத்தையும், சமூக நீதியையும் காக்கும் இளம் தலைவராக அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார். எத்தனை லட்சம் பேர் மாநாட்டில் கலந்து கொண்டாலும், ஒரு சிறு அசம்பாவிதம்கூட இல்லாமல் அமைதியான முறையில் மாநாடுகளை நடத்தக்கூடிய இயக்கமாக திமுக உள்ளது. இந்த தொகுதியில் அமைச்சராக இருக்கும் நமக்கெல்லாம் வழிகாட்டி ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஐயா அவர்கள், எப்போதெல்லாம் திமுக அரசு ஆட்சிக்கு வருகிறதோ, தன்னால் முடிந்த வரை அதிகப்படியான நலத்திட்டங்களை தொகுதியில் செயல்படுத்தி திமுகவை அடுத்த கட்டத்திற்கு கொண்டு சென்றுள்ளார். அவரைப்போல நாமும், அர்ப்பணிப்போடு உழைத்து தன்னலம் கருதாமல் கட்சியை வளர்த்து அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்றதோடு விருதுநகரில் நடைபெறும் மண்டல மாநாட்டில் ஒருவர் கூட தவறாமல் அழைத்து வந்து திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுகவிற்கு பெருமை தேடித்தர வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.



# கடல் உணவு தொழிலை மேம்படுத்த மத்திய பட்ஜெட்டில் சலுகைகள் அறிவிப்பு

புதுடெல்லி, பிப்.03-

கடல் உணவுத் தொழில், கடல் சார் ஏற்றுமதியை மேம்படுத்தும் வகையில் பட்ஜெட்டில் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மத்திய பட்ஜெட்டில் கடல் உணவுத் தொழிலுக்கும், கடல் சார் ஏற்றுமதிக்கும் பல்வேறு சலுகைகளை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். இந்தத் துறைகளை மேம்படுத்தும் நோக்கிலும் அமெரிக்காவின் வரி விதிப்பால் பாதிக்கப்பட்ட துறையை ஊக்குவிக்கும் வகையிலும் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, கடல் உணவுத் தொழிலுக்குத் தேவையான குறிப்பிட்ட மூலப்பொருட்களின் இறக்குமதிக்கு வரிகள் ரத்து செய்யப்பட உள்ளது. நாட்டின் கடல் எல்லைக்கு அப்பால் பிடிக்கப்படும் மீன்கள் இறக்குமதி வரியின்றி இந்தியாவுக்குள் கொண்டு வரப்படலாம். மேலும் வெளிநாட்டு துறைமுகங்களில் தரையிறக்கப்படும் அத்தகைய மீன்கள் ஏற்றுமதியாகக் கருதப்படும் என்று நிதியமைச்சர் தனது பட்ஜெட் உரையில் தெரிவித்தார்.

இந்த மாற்றங்களைச் செயல்படுத்த, இந்தியாவின் பிராந்திய நீர்நிலைகளுக்கு அப்பால் மீன் பிடிக்க அதன் அதிகார வரம்பை விரிவுபடுத்துவதற்காக, 1962ம் ஆண்டு சுங்கச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படும் என்றும் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கடல் உணவுத் தொழிலும் கடல் சார் ஏற்றுமதியும் மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

தென்காசி, பிப்.03-

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்று மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 690 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு..தண்டபாணி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) நம்பிராயர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் முத்துராமலிங்கம் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# "பாஜகவுக்கு வாக்குகள் விழாது என்பதால் பட்ஜெட்டில் தமிழகம் புறக்கணிப்பு" - அமைச்சர் ரகுபதி

சென்னை, பிப்.03-

தேர்தல் நடக்கும் மாநிலங்களை கவருவதற்காக பட்ஜெட்டில் சிறப்புத் திட்டங்களை அறிவிக்கும் நாடகத்தைக் கூட தமிழ்நாடு என்றால் புறக்கணிக்கிறது ஒன்றிய பாஜக அரசு. எவ்வளவு அறிவிப்புகளைச் செய்தாலும் தமிழ்நாட்டில் பாஜகவுக்கு வாக்கு விழாது என்பதை தெளிவாகத் தெரிந்தே பட்ஜெட்டில் தமிழ்நாட்டைப் புறக்கணித்திருக்கிறார்கள் என தமிழக அமைச்சர் ரகுபதி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "வழக்கமாக ஒன்றிய பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் சமயத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கி வரும் மாநிலங்கள் கொண்டாடக்கூடிய அம்சங்கள் இருக்கும். ஆனால், ஒன்றிய பாஜக அரசின் இப்போதைய பட்ஜெட்டில் தமிழ்நாடு கொண்டாட எதுவுமே இல்லை.

பாஜகவிற்குச் சித்தாந்த ரீதியில் சிம்மசொப்பனமாக இருக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். தமிழர்கள் மீது பாஜக கொண்டிருக்கும் வன்மம் ஒருபோதும் தீராது என்பதை மோடி அரசு தாக்கல் செய்த பட்ஜெட் நிரூபித்துவிட்டது.

தமிழ்நாடு என்கிற பெயரே இல்லாத பட்ஜெட்டை கடந்த காலங்களில் தாக்கல் செய்த ஒன்றிய பாஜக அரசு, அதற்குக் கடும் எதிர்ப்பு கிளம்பியதால் இந்த முறைப் பெயருக்காவது தமிழ்நாடு என்ற வார்த்தையைச் சேர்த்துவிடுவது என்று குறியாக இருந்திருக்கிறார் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன். அதுவும் பெயரளவு அறிவிப்புகள்தான். தமிழ்நாட்டுக்கென பிரத்தியேகமான சிறப்புத் திட்டங்கள் எதையும் பட்ஜெட்டில் அறிவிக்கவில்லை.

கடந்த காலத்தில் பிஹார் மற்றும் ஆந்திர மாநில சட்டப்பேரவைத் தேர்தலைக் கருத்தில் கொண்டு திட்டங்களை அள்ளி வழங்கியது ஒன்றிய பாஜக அரசு. குறிப்பாக 'பிஹார் பட்ஜெட்டா!' என சொல்லும் அளவிற்கு, வெள்ளத் தடுப்புப் பணிகளுக்கு ரூ.11 ஆயிரம் கோடி, மூன்று தேசிய நெடுஞ்சாலைகளை அமைக்க ரூ.26 ஆயிரம் கோடி, பெகல்பூர் மின் நிலைய திட்டத்திற்கு ரூ.21 ஆயிரம் கோடி எனச் சுமார் ரூ.70 ஆயிரம் கோடிக்குச் சிறப்புத் திட்டங்களை அறிவித்தது மோடி அரசு. ஆனால், இப்போதும் தமிழ்நாட்டை வழக்கம் போலவே புறக்கணித்திருக்கிறார்கள்.

மாநிலங்களுக்கான வரிப்பகிர்வை 41 சதவிகிதத்தில் இருந்து 50 சதவிகிதமாக உயர்த்த வேண்டும் என்ற நமது நீண்ட காலக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. மோடி குஜராத் முதல்வராக இருக்கும்போது, 50 சதவிகித வரிப் பகிர்வு கேட்டுப் போராடினார். அவர் பிரதமர் ஆன பிறகு அதனைச் செயல்படுத்த மறுக்கிறார்.

விடுவிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள



மாணவர்களின் படிப்புக்கான சமக்ரா சிக்ஷா நிதி 3,548 கோடி ரூபாய், தமிழ்நாடு சிறப்பாகச் செயல்படுத்தி வரும் ஜல்ஜீவன் திட்டத்துக்கான 3,112 கோடி ரூபாய் நிதி போன்றவற்றை விடுவிப்பது குறித்து பட்ஜெட்டில் எந்த அறிவிப்பும் இல்லை.

கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டம் பற்றி அறிவிப்பும் இடம்பெறவில்லை. அமெரிக்காவின் வரி விதிப்பால் பல்லாயிரம் கோடி இழப்பை சந்தித்திருக்கும் திருப்பூர் ,கோவை தொழிற்துறையை மீட்பதற்கு ஆக்கபூர்வ அறிவிப்புகள் எதுவும் இல்லை.

தேர்தல் நடக்கும் மாநிலங்களை கவருவதற்காக பட்ஜெட்டில் சிறப்புத் திட்டங்களை அறிவிக்கும் நாடகத்தைக் கூட தமிழ்நாடு என்றால் புறக்கணிக்கிறது ஒன்றிய பாஜக அரசு. நாட்டின் பொருளாதாரத்திற்கு 9 விழுக்காடு பங்களிப்பைச் செய்யும் தமிழ்நாட்டிற்கான வரிப்பகிர்வு வெறும் 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டதால் ஆண்டுக்குச் சுமார் ரூ. 5,000 கோடி நிதி இழப்பு ஏற்படும்.

பொதிகை மலையில் டிரெக்கிங், பழவேற்காட்டில் பறவைகளைக் கண்காணிக்க மூன்று புதிய கோபுரங்கள் அறிவித்திருக்கிறார்கள். இதெல்லாம் ஒன்றிய அரசின் அறிவிப்பா?

ஆட்சியைத் தாங்கி பிடிக்கும் பிஹாருக்கும் ஆந்திராவுக்கு வாரிக் கொடுப்பார்கள். ஆட்சி அமைக்கக் கூடிய மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல் நடந்தால் ஆயிரம் கோடிகளில் திட்டங்களை அறிவிப்பார்கள். ஆனால், தேர்தல் நடக்கும் காலத்தில்கூட அள்ளிக் கொடுக்க மனம் இல்லாமல் டிரெக்கிங், கோபுரம் என வெற்று அறிவிப்புகளை வெளியிட்டு ஏமாற்றப் பார்க்கிறது ஒன்றிய பாஜக அரசு. தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வர முடியாது என்பது தெளிவாகத் தெரிந்தே பட்ஜெட்டில் தமிழ்நாட்டைப் புறக்கணித்திருக்கிறார்கள்.

கடந்த 2021 சட்டப் பேரவைத் தேர்தலின் போது தாக்கல் செய்யப்பட்ட ஒன்றிய பட்ஜெட்டில் மதுரையில் தொழில் வழித்தடம், தமிழகத்தில் பல்நோக்கு கடல் பூங்கா, மதுரையிலிருந்து கொல்லம் நவீன தேசிய நெடுஞ்சாலை, சென்னை, கொச்சி உள்ளிட்ட 5 மீன் பிடி துறைமுகங்கள் மேம்படுத்தப்படும், புதிதாக 7 ஜவுளிப்பூங்கா அமைக்கப்படும் என்றெல்லாம் சொன்னார்கள். அவையெல்லாம் என்ன நிலையில் இருக்கிறது என சொல்வார்களா?

பொதுவாக ஞாயிற்றுக் கிழமைகளில் இந்தியப் பங்குச்சந்தைகள் விடுமுறையில் இருக்கும். ஆனால், ஞாயிற்றுக் கிழமை ஒன்றிய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டதால் பங்குச்சந்தைகள் செயல்பட்டன. அதன் விளைவு என்ன தெரியுமா? பங்குச்சந்தையில் ஏற்பட்ட கடும் சரிவு காரணமாக முதலீட்டாளர்களுக்கு 10 லட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. ஒன்றிய பட்ஜெட்டில் பலனே இல்லை என்பதைப் பங்குச் சந்தையே பறைசாற்றி விட்டது.

தமிழ்நாட்டை முழுவதுமாக புறக்கணித்த பட்ஜெட்டை வெட்கமேயில்லாமல் வரவேற்று அறிக்கை விடுகிறார் அடிமை பழனிசாமி. சொல்வதற்கு ஒன்றுமேயில்லாமல் தொடர்ந்து 9ஆவது முறையாக நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்து புதிய வரலாற்றுச் சாதனையை படைத்துள்ள நிதி அமைச்சருக்கு வாழ்த்துகள் என்று அறிக்கை வெளியிடுகிறார்.

அதிமுகவோ பாஜகவோ எத்தனை முகமூடிகளை அணிந்து வந்தாலும் வரும் சட்டமன்றத் தேர்தலில் மட்டுமல்ல இனி எப்போதும் தமிழ்நாட்டில் தலையெடுக்க முடியாது. இதனை உணர்ந்து கொண்டதால்தான் ஒன்றிய பட்ஜெட்டில்கூட தமிழ்நாட்டை வஞ்சித்திருக்கிறார்கள். பட்ஜெட்டில் தமிழ்நாட்டை ஒன்றும் செய்யாமல் வஞ்சிக்கும் பாஜக அரசுக்கு அவர்களின் அடிமைகளுக்கும் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்' எனத் தெரிவித்தார்.



■ தென்காசி மாவட்டம் இ.சி.ஈ. ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், 4–வது பொதிகை புத்தகத் திருவிழாவின் 3 நாள் நிகழ்வாக எழுத்தாளர் அகிலாண்ட பாரதி எழுதிய 'பாண்டியர் இருவர் "என்ற தலைப்பில் நாவல் மற்றும் ஊருக்குள் வந்த ஒட்டகம் என்ற தலைப்பில் சிறார் வாசிப்பு நூலினை, கலைமாமணி கவிஞர் கலாப்ரியா வெளியிட, மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயசந்திரன் பெற்று கொண்டார்.



■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் செ. சரவணன் தலைமையில், வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் முகாம் நடைபெற்றது. உடன் அனைத்து துறை அரசு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.



# விஎஸ்ஆர் மெட்ரிக் பள்ளி மாணவிகள் தமிழ்நாடு அரசின் "இது நம்ம ஆட்டம்" போட்டியில் முதலிடம்

தமிழ்நாடு அரசு இது நம்ம ஆட்டம் என்ற போட்டியை நடத்தியது. இப்போட்டியில் ராதாபுரம் வட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளும் பங்கு பெற்றன. மொத்தம் ஒன்பது அணிகள் கலந்து கொண்டதில், கேரம் இரட்டையர் பிரிவில் வி எஸ் ஆர் மெட்ரிக் மாணவிகள் கே ஆர் சாகித்யா மற்றும் ஷிலோ முதலிடத்தை பிடித்து சாதனை படைத்தனர். வெற்றி பெற்ற மாணவிகளுக்கு தலா மூன்றாயிரம் ரொக்க பரிசும் சான்றிதழும், மெடலும் வழங்கப்பட்டது.

வெற்றி பெற்ற மாணவிகளை பள்ளி தாளாளர் வி எஸ்ஆர் ஜெகதீஷ் பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தார். மாணவிகளுக்கு சிறந்த பயிற்சி கொடுத்து சாதனை படைக்க வைத்த, உடற்கல்வி ஆசிரியர் களையும், மேலும் துணை முதல்வர் விஜயா தினகரன் மற்றும் ஆசிரியர்களும் வெற்றி பெற்ற மாணவிகளை வாழ்த்தி பாராட்டினர்.



# பழனி தைப்பூசத் திருவிழா பாதயாத்திரை பக்தர்களுக்கு திமுக வர்த்தக அணி அன்னதானம்

திண்டுக்கல், பிப்.03-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டத்திற்குட்பட்ட குழந்தை வேலப்பர் கோவிலில், பழனி தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு, பாதயாத்திரையாக வருகை தரும் பக்தர்களுக்கு உணவு, குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய வசதிகள் வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஒட்டன்சத்திரம் நகரச் செயலாளர் வெள்ளைச்சாமி அவர்களின் தலைமையில், திமுக ஒட்டன்சத்திரம் நகர வர்த்தகர் அணிச் செயலாளர் சதீஷ் பாபு அவர்கள் இந்த சேவைப் பணிகளை ஒருங்கிணைத்து நடத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் பழனிக்கு பாதயாத்திரையாக செல்லும் நூற்றுக்கணக்கான பக்தர்களுக்கு சத்தான உணவு, குடிநீர் உள்ளிட்ட தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து வரும் பக்தர்கள் சிரமமின்றி தங்கள் பயணத்தை மேற்கொள்ளும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்ச்சியில் திமுக நிர்வாகிகள், நகர நிர்வாகிகள், வர்த்தகர் அணி உறுப்பினர்கள், கட்சி தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டு சேவைப் பணிகளில் ஈடுபட்டனர். பக்தர்கள் அனைவரும் இந்த சேவை நடவடிக்கைகளை மனமார பாராட்டி நன்றி தெரிவித்தனர். மக்களின் நலனுக்காகவும், ஆன்மிக நிகழ்வுகளில் சமூகப் பொறுப்புடன் செயல்படுவதிலும் திமுக தொடர்ந்து முன்னுதாரணமாக செயல்பட்டு வருவதாக நிகழ்ச்சியில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர்.



■ பாண்டிச்சேரியில் தேசிய சிலம்ப கூட்டமைப்பு நடத்திய, 13வது தேசிய சிலம்பப் போட்டி 2026 இல் திசையன்விளையைச் சேர்ந்த மாணவி ஷிவானி பாலா தனிநபர் மற்றும் கம்பு சண்டை 2 போட்டியிலும் முதலிடத்தை பிடித்தார்.

# தூய்மை பணியாளர்களுக்கு ஒரு இனிப்பான செய்தி உள்ளது விரைவில் கூடுதல் ஊதியம் அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி



சின்னாளபட்டி, பிப்.03-

திண்டுக்கல் மாவட்டம், என்.பஞ்சம்பட்டிக்கு அரசு நலத்திட்டங்கள் வழங்க வந்த அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் என்.பஞ்சம்பட்டி ஊராட்சி தூய்மை பணியாளர்கள் தங்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். கோரிக்கையை ஏற்ற ஊரக வளர்;ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் மத்தியில் பேசும்போது கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை தூய்மை காவலர்கள், தூய்மை பணியாளர்களுக்கு அதிமுக அரசு ஊதிய உயர்வு வழங்கவில்லை. ஊரக வளர்ச்சித்துறை அமைச்சராக நான் பொறுப்பேற்ற பின்பு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்க ளிடம் தூய்மை பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்ததையடுத்து கருணை உள்ளத்துடன் தமிழக முதல்வர் ஊதிய உயர்வு வழங்கினார். தற்போது உங்களுக்கு ஒரு இனிப்பான செய்தி உள்ளது. விரைவில் உங்களுக்கு மீண்டும் ஊதிய உயர்வு கிடைக்கும். தமிழக முதல்வர் திராவிட மாடல் ஆட்சி நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உங்களுக்கு விரைவில் ஊதிய உயர்வை அறிவிப்பார் என்றார். அப்போது அங்கிருந்த தூய்மை பணியாளர்கள் ஐயா நீங்கள் வந்தபின்புதான் எங்களுக்கு 2500 ரூபாய் கூடுதலாக ஊதியம் கிடைத்தது. இப்போது மீண்டும் ஊதிய உயர்வு கிடைக்கும் என சொல்கிறீர்கள். நீங்கள்தான் எங்கள் குலசாமி. என்றும் உங்களை மறக்கமாட்டோம் என கண்ணீர் மல்க அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு தூய்மை பணியாளர்கள் நன்றி தெரிவித்தனர்.

# மதுரை தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் வாகன ஏல அறிவிப்பு

மதுரை, பிப்.03-

மதுரை தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் பயன்படுத்தப்பட்டு கழிவு செய்யப்பட்ட TN 59 G 0777 என்ற அம்பாசிடர் வாகனம் எந்த நிலையில் உள்ளதோ அதே நிலையில் வரும் 26.02.2026ஆம் தேதி மாலை 04.30 மணிக்கு புது நத்தம் ரோடு, கலைஞர் நூலகம் எதிரே உள்ள மதுரை, தலைமை நீதித்துறை நடுவர் குடியிருப்பில் வைத்து பொது ஏலத்தில் விடப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. தொழில் நுட்ப வல்லுநரால் குறைந்தபட்ச ஏல நிர்ணயம் செய்த தொகை ரூ.34,000/ (ரூபாய் முப்பத்தி நான்காயிரம் மட்டும்). ஏலம் எடுக்க விரும்புவோர் 24.02.2026ஆம் தேதி காலை 11.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை மேற்படி முகவரியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மேற்படி வாகனத்தை பார்வையிட்டுக் கொள்ளலாம்.

வாகனத்தை ஏலம் எடுக்க விருப்பம் உள்ளவர்கள் ஏலத்தில் கலந்து கொள்ள 26.02.2026ஆம் தேதியன்றே ரூ.2000/ முன்பணம் செலுத்தி தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். பதிவு செய்தவர்கள் மட்டுமே ஏலம் எடுக்க அனுமதிக்கப்படுவார்கள். ஏலம் எடுத்தவுடன் முழுத்தொகை மற்றும் அதற்கு உண்டான சரக்கு மற்றும் சேவை வரி (நான்கு சக்கர வாகனத்திற்கு 18%) முழுவதையும் அரசுக்கு அன்றே ரொக்கமாக செலுத்தி வாகனத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என தலைமை நீதித்துறை நடுவர் செல்வபாண்டி செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.












# ஒட்டன்சத்திரம் பழனி முருகன் கன்ஸ்ட்ரக்ஷன் - தண்டபாணி குரூப் பாதயாத்திரை பக்தர்களுக்கு தொடர்ந்து 15 ஆண்டுகளாக அன்னதானம்

திண்டுக்கல், பிப்.03-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் குழந்தை வேலப்பர் கோவிலில் பழனி தைப்பூச திருவிழாவை முன்னிட்டு, பாதயாத்திரையாக பழனி முருகனை தரிசிக்க வரும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்காக ஒட்டன்சத்திரம் பழனி முருகன் கன்ஸ்ட்ரக்ஷன் - தண்டபாணி குரூப் சார்பில் கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்து, தைப்பூச திருவிழா காலத்தில் இந்த அன்னதான விழா நடைபெற்று வருவது, பக்தர்களிடையே பெரும் பாராட்டைப் பெற்று வருகிறது.

தைப்பூச திருவிழாவை முன்னிட்டு, பாதயாத்திரை செல்லும் பக்தர்கள் ஓய்வெடுத்து உணவருந்தும் வகையில், கோவில் அருகே அமைக்கப்பட்டுள்ள அன்னதான பந்தலில், காலை முதல் இரவு வரை அனைவரையும் "வருக, வருக" என அன்புடன் வரவேற்று, சுவையான மற்றும் சத்தான உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. வயது, மதம், இனம் என்ற பேதமின்றி அனைத்து பக்தர்க ளுக்கும் அன்னதானம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்த சேவையை மேற்கொண்டு வரும் ஒட்டன்சத்திரம் பழனி முருகன் கன்ஸ்ட்ரக்ஷன் - தண்டபாணி குரூப் நிர்வாகத்தினருக்கு, பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் தரப்பிலிருந்து பாராட்டுகளும், நன்றிகளும் குவிந்து வருகின்றன. சமய உணர்வையும், சமூக பொறுப்பையும் ஒருங்கிணைக்கும் இந்த அன்னதான சேவை, தைப்பூச திருவிழாவின் ஆன்மிகத் தன்மைக்கு மேலும் சிறப்புச் சேர்ப்பதாக அமைந்துள்ளது.



■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு திண்டுக்கல் சாணார்பட்டி ஒன்றியம் கணவாய்பட்டி ஊராட்சி கொரசினம்பட்டியை சேர்ந்த ஊர் பொதுமக்கள் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள கல்குவாரியை ரத்து செய்யக் கோரியும், ரத்து செய்யாவிட்டால் வருகின்ற சட்டமன்றத் தேர்தலை புறக்கணிப்போம் என்று கூறிவாயில் கருப்பு துணி கட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

# "தவெக சென்று செங்கோட்டையன் செல்லாக்காசு ஆகிவிட்டார்!" - செல்லூர் ராஜு

மதுரை, பிப்.03-

''யாரும் ஏற்றுக் கொள்ளாததால் செங்கோட்டையன் தவெகவுக்குச் சென்றுள்ளார். அவர் செல்லாக்காசு, திருவிழாவில் காணாமல் போன ஆடாக நாங்கள் கருதுகிறோம்'' என்று அதிமுக முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜு தெரிவித்தார்.

மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய செல்லூர் ராஜு, '' கருத்துக் கணிப்புகள் தற்போது அதிமுகவுக்கு சாதகமாக வருகிறது. இந்த கருத்துக் கணிப்புகளை பார்த்து திமுக கலக்கமடைந்துள்ளது.

திமுக தனது கூட்டணிக் கட்சிகளை அடிமைபோல் வைத்துள்ளது. மக்கள் பிரச்சினைகளைப் பற்றி வாய் திறக்காமல் உள்ளனர். பாஜக கூட்டணியில் திமுக



இருந்தபோது அவர்கள் சொன்னதையெல்லாம் நிறைவேற்றினார்கள்.

மதுரை மெட்ரோ ரயில் திட்டம் சொதப்பலுக்கு தமிழக அரசே முக்கிய காரணம். வழித்தடம், எத்தனை இடங்களில் ஸ்டேஷன், எத்தனை லட்சம் பேர் பயன்பட போகிறார்கள் என்பது போன்ற புள்ளி விவரங்களை கொடுக்கவில்லை. மத்திய அரசு அதற்கான விளக்கம் கேட்டுதான் கடிதம் அனுப்பினார்கள். ஆனால், அதற்குள் ரத்து செய்ததாக திமுகவினர் வதந்திகளை பரப்பினார்கள்.

செங்கோட்டையன் செல்லாக் காசு ஆகிவிட்டார். அவரது பேச்சை பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அவரை எந்தக் கட்சியும் ஏற்றுக் கொள்ளாததால் வேறு வழியில்லாமல் தவெகவுக்குச் சென்றுள்ளார்.

அதிமுகவில் தொண்டனுடைய ரதத்தத்தையெல்லாம் உறிஞ்சிவிட்டு, சுகத்தை அனுபவித்துவிட்டு மாற்றுக் கட்சிகளுக்கு செல்வோரை பற்றி நாங்கள் கவலைப்பட மாட்டோம்.

ஊர் திருவிழாவில் காணாமல் போன ஆட்டை நாங்கள் தேடுவதில்லை. உடனே செங்கோட்டையனை செல்லூர் ராஜு சாடல் என்று போட்டுவிடுவீர்கள். அவரையும், என்னையும் வைத்து கார்ட்டூன் போட்டுவிடுகிறீர்கள். சும்மா விடுங்க சார்'' என்றார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000